**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 114/2019**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | செந்தில் வேல் | P.W.3. Cross |
| த/பெ. | : | ஜெயராமன் | |
| தேதி | : | 20.11.2025 | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**5ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை: –**

1. எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை வந்ததா என்றால் இல்லை. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 4, 5 பிரதிவாதிகளை எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வாதிகள் என்ன பரிகாரம் யார்யாருக்கு எதிராக கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தாவா சொத்து 30 வருடங்களாக வாதிகளின் அனுபவத்தில் உள்ளது. என்ன பரிகாரம் கோரி யார் யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதிக்கும் வாதிகளுக்கும் இடையே பிரச்சனை இருந்தது. தாவா சொத்தை பொறுத்து 4ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் மூலம் கிரயம் செய்துக்கொடுத்துள்ள விரபம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. தாவா சொத்திற்கு அரசாங்கத்தால் வழங்கபட்டதாக சொல்லப்படும் பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் 2ம் வாதி கவிதாவின் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட பட்டாவை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் ரத்து செய்து உத்தரவு பிறப்பித்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு மேற்கில் வாதிகளின் பூர்வீக வீடு உள்ளது என்றால் சரிதான். அதில் 1ம் வாதியின் சகோதரர் வசித்து வருகிறார். வாதி பயன்படுத்தி வரும் கழிப்பறை எங்கு உள்ளது என்றால் தாவா சொத்தில் தான் உள்ளது.

3. வாதியின் பூர்வீக வீட்டிற்கு அருகில் தான் கழிப்பறை கட்டப்பட்டுள்ளது என்றாலும், இந்த வழக்கிற்காக தாவா சொத்தில் உள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும், வாதியின் அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு நான் உறவினரா என்றால் இல்லை. நானும் வாதிகளும் ஒரே தெருவில் வசித்து வருகிறோம். நானும் வாதிகளும் ஒரே தெருவில் வசித்து வருவதால் தான் 5ம்

பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தை வாதிகள் அபகரிப்பதற்கு உடந்தையாக வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் வாதிகளும் ஒரே தெருவில் வசித்து வருவதால் நான் விருப்ப சாட்சி என்றாலும், அதனால் எனது சாட்சியம் ஏற்புடையதல்ல என்றாலும் சரியல்ல.